1994 ஏப்ரல் 13]

ஆணை பிறப்பித்து, அதை நேரடியாகப் பார்வையிட்டு, இயலுமானால் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 266, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

266—

போளூர், அத்திமூர், மாம்பட்டு ஏரிகளை ஆழப்படுத்தும் திட்டம்

*** 11879-திரு. தா. வேடியப்பன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டத்தில், போளூர், அத்திமூர், மாம்பட்டு ஏரிகளை புல்டோசர் உதவியுடன் ஆழப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போளூர், அத்திமூர், மாம்பட்டு ஆகிய ஏரிகளில் தற்போது முழு அளவில் நீர் நிறைந்திருப்பதால் புல்டோசர் உதவியுடன் ஆழப்படுத்த இயலாது.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 ஏரிகளைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 4 அடி உயரம், 5 அடி உயரம்வரை எல்லா ஏரிகளிலுமே மணல் நிறைந்திருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடர்ச்சியான ஜவ்வாது மலைக்கு அருகிலே அந்த 3 ஏரிகளும் இருப்பதால் அதிகமான அளவில் மணல் வந்து நிரம்பி தூர்ந்து இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி விவசாய மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வண்ணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை வரும் காலத்திலாவது பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர், அத்திமூர், மாம்பட்டு ஏரிகளில் இப்போது நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல தண்ணீர் இருக்கிறது. நீர் வற்றிய பின்பு, நீர்ப் பரப்பின் மட்ட அளவுகளை எடுத்து, ஏரியிலுள்ள மண் அளவினைக் கணக்கிட்டு திட்டமிட்டதற்குப் பின்னாலே, கொள்ளளவு

குறைவாக இருந்தால் புல்டோசர் மூலம் தூர் எடுக்கலாம் என்று ஏற்கெனவே பொதுவாக ஏரிகளை ஆழப்படுத்துவதற்காக ஆய்வு செய்து இருக்கிறார்கள்; இப்போது, இந்த ஏரியின் கொள்ளளவு மிகவும் குறைந்ததாகக் கணக்கில் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு இணங்க அது சம்பந்தமான திட்ட அறிக்கை, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, கொள்ளளவு குறைவாக இருக்குமேயானால் அதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் தயாரித்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்பு, நான் இளம் வயதாக இருந்தபோது இந்த 3 கிராமங்களின் ஏரிகளும் முதலில் ஆழப்படுத்தப்பட்டன. அதன்பிறகு, நான் குறிப்பாக பொதுப் பணித் துறை அதிகாரிகளைக் கேட்டபோது, போளூர் ஏரியிலே 1.5 மீட்டர் அளவு மணல் நிறைந்து இருப்பதாகவும், மாம்பட்டு ஏரியில் 4 அடி உயரத்திற்கு மணல் நிறைந்திருப்பதாகவும், அத்திமூர் ஏரியிலே 2 மீட்டர் உயரத்திற்கு மணல் நிறைந்து இருப்பதாகவும் அதிகாரிகள் கூறி இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் எல்லாம், எப்போது பார்த்தாலும், 'உங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் இப்போது ஏழை எளிய விவசாய மக்களுக்காக நல்ல திட்டங்களைச் செய்துகொண்டு இருக்கிறார்கள்; எனவே இந்த 3 ஏரிகளிலும் புல்டோசர் மூலம் அதிகமான ஆழம் ஏற்படுவதற்கும், அங்கே இருக்கக்கூடிய மணலை வெளியே எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தால் வசதியாக இருக்கும்., என்று மக்கள் தெரிவித்தார்கள். மேலும் நான் நேரடியாக அந்தக் கிராமங்களில் சுற்றுப் பயணம் செய்யும்போதும் குறைபாடுகளைத் தெரிவிக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நான் சொன்னதைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த ஏரிகளுக்கு என்று திட்டம் தயாரிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட ஏரிகளைத் தூர் வாருவது சம்பந்தமாக எப்படிச் செய்யலாம் என்று ஒரு ஆய்வு இருக்கிறது. ஏற்கெனவே, ஏதோ திட்டம் இருப்பதைப்போலச் சொன்னால், அதிலே ஏன் நடக்கவில்லை என்று பிரச்சினை வரும். ஆகவே, இதுபோன்ற ஏரிகளையும் ஆய்வு செய்து, கொள்ளளவு எவ்வளவு குறைந்து இருக்கிறது

1994 ஏப்ரல் 13]

என்பதைப் பார்த்துத்தான் சீரமைக்க முடியும். இருக்கின்ற நிதி ஆதாரங்களையும் பார்த்துத்தான் செய்ய முடியும். ஏற்கெனவே, கடந்த 5 ஆண்டுகளில் இந்த ஏரிகளில் 2 முறை, ஒவ்வொரு ஏரியிலும் நீர் நிறைந்து இருக்கிறது. ஆகவே, கொள்ளளவைப்பற்றி கணக்கு எடுத்ததற்குப் பின்னாலேதான், அதற்கான திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 267, திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை திரு. தவசி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

267—

உத்தமபாளையம் தாலுகா, ஓடைப்பட்டியில் நீர்த்தேக்கம் கட்டுதல்

*** 17144-திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்தமபாளையம் தாலுகா, ஓடைப்பட்டி கிராமம், வடலூத்து கணவாய் முடக்கு நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கணவாய் முடக்கு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை. ஆனால், உத்தமபாளையம் வட்டம், ஓடைப்பட்டி கிராமம் கணவாய் முடக்கு அருகே ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டம் தலைமைப்பொறியாளரின் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) ஆய்வில் இருக்கிறது.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தமபாளையம் தாலுகா, ஓடைப்பட்டி கிராமம், நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலுள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். இந்தக் கிராமத்தில், பல்வேறு கிராமங்கள் பயன் அடையக்கூடிய அளவில் ஒரு சிறு ஓடை போன்று உள்ளது. அதை மீண்டும் பரிசீலனை